தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் சரு	திருவள்ளுவர் யாண்டு உயயஉ விரோதிகிருது, ஆவணி (1971 — ஆகஸ்டு — செப்டம்பர்)	மலர் ரு

தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும்

திரு. சா. குருமூர்த்தி. எம். ஏ. எம். லிட்.,
டிப்ளமா. மானிடயியல்.
தொல்பொருளாய்வுத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.

தமிழகத்தில் அகழ்வாராய்ச்சி

அரிக்கமேடு :- பாண்டிச்சேரிக்கு அருகில் உள்ள இவ்வூரிலேயே தமிழகத்தில் முதன் முதலில் அறிவியல் முறைப்படி அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டது. 1945-ம் ஆண்டு சர் மார்டிமர் வீலர் (Sir Martimer wheeler) என்பவரால் இப்பணி இங்குத் தொடங்கப்பட்டது.[1] தமிழ்நாட்டிற்கும், உரோமிற்கும் இடையே வாணிப, பண்பாட்டுத் தொடர்பு இருந்துவந்ததைப் பற்றிச் சங்ககால இலக்கியங்களும். வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்புகளும் உணர்த்துகின்றன. என்பதை முன்னமேயே குறிப்பிட்டுள்ளோம். தமிழர் உரோமாபுரிமக்களிடையே உறவு முறையினை வலுப்படுத்த இக்கடற்கரைப் பட்டினம் பெரிதும் பயன்படுத்தப்பட்டிருக்கவேண்டும். இவ்வூரில் உரோமர்கள் மிகப்பலர் பெரிதும் விரும்பித் தங்கி வாழ்ந்து வந்தனர் அவர்கள் வசித்து விட்டுச் சென்ற வீடுகள், பயன்படுத்திய தங்கக்காசுகள், பானைகள், இன்னும் பல பண்பாட்டுச் சின்னங்கள் அகழ்வாராய்ச்சியின் மூலம் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன.

இத்தொல்பொருள்களின் காலம் சுமார் கி. மு. முதல் நூற்ருண்டுக்கும் கி. பி முதல் நூற்ருண்டிற்கும் இடைப்பட்ட காலமாகும். சுட்ட மண்ணல் செய்யப்பட்ட அழகிய ஆண், பெண் உருவங்கள், வண்ணம் தீட்டிய பளபளப்பான பானை ஓடுகள் உருவங்கள் வரையப்பட்ட பானைஓடுகள், பிராமி எழுத்துக்களை

1. Ancient India No .2

தாங்கிய பானை ஓடுகள், தந்தப்பொருள்கள், அழகான பளபளப் பான பல வண்ணக் கற்கள், கண்ணாடி மணிகள், காதணிகள், சங்கு வளையல்கள் போன்றவையும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஒரு சாயத்தொட்டியும் கிடைத்துள்ளது. இவை தமிழர் பண் பாட்டுப் பெருமையை மேலும் உயர்த்தும் வகையில் அமைந் துள்ளன. அன்றியும் அக்கால மக்களின் சமூக வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகளாகவும் விளங்குகின்றன. இங்கு அகப்பட்டுள்ள சுட்ட மண் பொம்மைகள் வரலாற்றுச் சிறப்பு மிக்க கலைப்பொருள்களாகும். அவற்றுள் தெய்வத்திருமேனி. ஆண், பெண் விலங்குகளின் உருவங்கள் குறிப்பிடத்தக்கவை யாகும். பெண் உருவங்கள், அக்கால மகளிர் சேலைஉடுத்தும் முறை, முடி ஒப்பனை செய்துகொள்ளும் பாணி, காதணிகள், கைவளையல்கள் ஆகியவற்றை அணிகின்ற அழகுபோன்ற கலைச் சுவைமிக்க கூறுகளை அப்படியேபடம்பிடித்துக் காட்டுகின்றன. ஒரு பெண் ஆரியப்பாணியில் சேலை உடுத்திக்கொண்டிருக்கிறாள் இதன் காலம் சுமார் கி. பி. இரண்டாம் நூற்றாண்டாகும். இப் பொம்மை தமிழகத்தில் ஆரியப் பண்பாட்டின் ஊடுருவலைக் காட்டுகின்றது; பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் அக்கால சமுதாயத்தில் சாதாரணக் குடிமக்களிடையே நிலவி வந்த கல்வி அறிவை நமக்குக் காட்டுகின்றன.

தமிழகத்தில் பிராமி எழுத்தின் காலம் மிகத் தொன்மையான தாகும். அதாவது கி. மு. 300 முதல் கி. பி. 400 - 500 எனக் கொள்ளலாம். இப்பிராமி எழுத்துக்களைக் கொண்ட கல் வெட்டுகள் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் எடுக்கப்பட்டுள்ள சமணர் குகைச் சுவர்களில் காணப்படுகின்றன. பானை ஓடுகளில் காணப்படுகின்ற பிராமி எழுத்துக்கள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும் இதே காலவரம்பிற்குட்பட்ட பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் அலகரை, உறையூர், கொற்கை காஞ்சிபுரம் போன்ற ஊர்களில் கிடைத் துள்ளன. எழுத்துக்கள் பிராமியாக இருந்தாலும் இவை உணர்த்தும் மொழி தமிழ்மொழியேயாகும். தமிழ்எழுத்துக் களின் தற்கால வடிவங்கள் மிகப்பழங்காலத்திலேயே தோன்றி, பல கட்டங்களைக் கடந்து வளர்ச்சிப் பெற்றிருத்தல் வேண்டும். தமிழ் எழுத்துக்கள் தோன்றிய தொடக்க காலத்தில் அவற்றின் வடிவங்கள் எவ்வாறு இருந்திருக்கவேண்டும், என்பதை இப் பானை ஓடுகளும், குகைகளில் காணப்படும் பிராமி எழுத்துக் களும் நமக்கு ஓரளவுக்கு உணர்த்துகின்றன. இந்தியாவில் ஆதிகாலத்தில் வழக்கில் இருந்து வந்த எழுத்து பிராமியே யாகும். தற்போது வழக்கில் இருக்கின்ற பல்வேறு எழுத்துக்கள்

பிராமியின் மூலமாகத்தான் உருப்பெற்று வளர்ந்துள்ளனஎன்று சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றூர்கள். தமிழும் பிராமியிலிருந்து தோன்றி வளர்ந்து வந்திருக்கலாம் என நாம் நம்பினல் இந்தப்பிராமி கல்வெட்டுக்களும், பானை ஓடுகளும் வரலாற்றுச் சிறப்புடையனவாகும்.[2]

திருக்காம்புலியூர் :— (குளித்தலை வட்டம், திருச்சி மாவட்டம்) கீழ்க்காவேரி பள்ளத்தாக்கில் புதையுண்டு கிடக்கின்ற தமிழர் பண்பாட்டுச் சிறப்பினை உலகுக்கு உணர்த்தவே இங்குச் சென்னைப் பல்கலைக் கழகத் தொல்பொருள் ஆய்வுத்துறை 1962-63-ல் அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டது.[3] இது காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள ஒரு சிற்றூராகும். தமிழர் பழம் பெரும் நாகரீகமும், பண்பாடும், இந்தக் காவிரியாற்றின் கரைகளில் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு தோன்றி வளர்ந்த கதையை நாம் தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்பினை அளித்துள்ளது இவ்வகழ் வாராய்ச்சி. அக்காலத்தில் காவிரியாற்றின் நீர்ப் பெருக்கினல், நிலவளம் மிகுந்த நாடாகத் தமிழகம் விளங்கிற்று இன்றும் விளங்குகிறது. குறிப்பாகக் கூறினல் சோழர் காலத்தில் காவிரிப் பள்ளத்தாக்கின் வளத்தினை வருணிக்க வார்த்தைகள் போதா. வானளாவிய எண்ணிறந்த கோவில்கள் இங்கே எழுந்தன; தமிழர்களின் அயராத உழைப்பினையும், கலைத்திறனையும், கற்பனை வளத்தையும், சமய வாழ்க்கையின் மேம்பாட்டையும் உலகுக்கு இன்றும் இவை பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன.

---

2. தமிழ் எழுத்துக்கள் பிராமியிலிருந்து உருப்பெற்று வளர்ந்துவந்துள்ளன என்ற கூற்றை ஒப்புக்கொள்ளத் தயக்கமாக உள்ளது. காரணம், தமிழ் எழுத்துக்களின் தொடக்கமும் கி மு. 300 எனக் கொள்ளல்வேண்டும். சங்ககாலத்துத் தமிழ் இலக்கியங்களின் சிறப்பினைக் காணும்போது தமிழ் எழுத்துக்கள் கி. மு. 300-க்கும் முன்பாக தோன்றியிருக்க வேண்டும் எனக் கூறலாம். சிந்து சமவெளி முத்திரைகளில் காணப்படும் எழுத்து வடிவங்களில் சில பிராமி எழுத்துக்களை ஒத்துள்ளது. எனவே பிராமி எழுத்துக்கள் சிந்து சமவெளி நாகரீகத்திற்குரிய எழுத்துக்களிலிருந்து உருப்பெற்று வளர்ந்து வந்திருக்கலாம் எனக் கருத இடமுள்ளது. மேலும் சிந்து சமவெளி நாகரீகம் திராவிடர் நாகரீகம் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் பிராமியிலிருந்து தமிழ் எழுத்துக்கள் தோன்றியிருக்கலாம் எனக் கருத வாய்ப்புள்ளது.

3. Dr. T. V. Mahalingam, Excavations in the Lower Kaveri Valley (University of Madras, 1971)

பழந்தமிழர் பண்பாட்டுச் சிறப்பினைச் சங்க இலக்கியங்கள் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன. இவற்றில் கூறப்பட்டுள்ள செய்திகளையும் கருத்துக்களையும் நம் மனதில் கொண்டு அகழ்வாராய்ச்சிகளின் மூலம் கிடைத்துள்ள சான்றுகளையும் வைத்து ஒப்பிட்டுச் சீர்தூக்கிக் காணும்போது இலக்கியங்களின் அருமை பெருமை மேலும் உயர்வடைகின்றன. அக்காலப் புலவர்கள் தாங்கள் நேரில் பார்த்து அனுபவித்த காட்சிகளையே தான் இலக்கியங்களாக வடித்துள்ளனர் என்பது புலனாகின்றது அவர்கள் எதையும் உண்மைக்குப் புறம்பாகவோ அல்லது வெறும் புகழ்ச்சிக்காகவோ உரைக்கவில்லை. அகழ்வாராய்ச்சி வாயிலாகக்கிடைக்கும் பண்பாட்டுச் சின்னங்களை நாம் நேருக்கு நேராகப் பார்க்க முடிகின்றது. அவற்றைப் பிற மக்களுக்கும் எடுத்துக் காட்டலாம்.

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. பதினாறும் நூற்றாண்டு வரை வாழ்ந்த தமிழர்களின் வாழ்க்கையைப் பற்றித் தெரிந்து கொள்ள இவ்வூரில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சி உதவுகிறது. திருக்காம்புலியூரில் ஆதிமக்களின் குடியேற்றம் தொடங்கிய காலம் ஏறக்குறைய கி. மு 500 ஆகும். இங்கு ஒரு பெரிய புதையுண்ட செங்கற் கட்டிடம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது இரண்டு சிறிய அறைகளையும், ஒரு முன் தாழ்வாரத்தையும் கொண்டுள்ளது இது ஒரு நெற்களஞ்சியமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இறுகிய களிமண், கூழாங்கற்களைக் கொண்டு தளம் போடப்பட்டுள்ளது. சிறிய அரைச் செங்கற்களால் சுவர்கள் கட்டப்பட்டுள்ளன. களிமண்கூழ், இணைக்கும் சாந்தாகப் பயன்பட்டிருக்கிறது இக்கட்டிடம் கி. பி. மூன்றும் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்கவேண்டும். மண் சுவர்களைக் கொண்ட சிறிய குடிசைகளில், கூரையைத் தாங்குவதற்காகப் பொருத்தப்படுகின்ற மூங்கில் கால்களைத் தாங்கும் குழிகளும் (Post holes), சாணம், சுண்ணாம்பு கலக்கப்பட்டு மெழுகிய மண் தரைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன களிமண்ணாலாகிய சுடாத கற்களைக்கொண்ட இடிந்த சுவர்களும் அகப்பட்டுள்ளன. அக்காலக் கட்டிடக் கலையின் மேம்பாட்டினை இவை மூலம் நாம் ஓரளவுக்குத் தெரிந்துகொள்ளமுடிகின்றது.

சிதைந்த கட்டிடங்களைத் தவிர, கண்ணைக்கவரும் வண்ணம் தீட்டிய பானை வகைகள், கிண்ணங்கள் தட்டுகள், கல் மணிகள், சங்கு வளையல்கள், இரும்பு. செப்புப் பொருள்கள் ஆகியவையும் இங்கே நூற்றுக்கணக்கில் கிடைத்துள்ளன.

(வளரும்)

நெடுநல்வாடை

திரு. K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்., தஞ்சை.

(முற்றொடர்ச்சி. துணர் ௪௫ மலர் ௩.)

அறிவியல் அறிஞராய நக்கீரரது நோக்கிற்குக் காரண மாயது, அவர் தம் சொல்லியல் சால்பும், சொல்வழக்கின் நய மும், சொற்றொடரியலோடு கூடிய சொற் பொருளியலின் அமைப்பு நலமுமாகு மென்க. எனவே நக்கீரரது சொல்வகை நோக்கினை அறிந்து பயனுறுதல் இன்றியமையாதது. பொரு ளினைத் துணிந்துணரும்படி அறிவிக்கும் ஆற்றலுடைய எழுத் தொலியே சொல்லாகும், சொல்லுக்கு பொருளினை அறிவிக்கும் ஆற்றலும், கருத்துக்களை நினைப்பூட்டும் ஆற்றலுமுண்டு கருதிய பொருளினை நேராற்றலினுலே அறிவிக்கும் செஞ்சொற் களையே பெரும்பாலும், நக்கீரர் எடுத்தாண்டுள்ளார். பொருள் களை உணர்த்தும் ஆற்றலில்லாத சொற்கள் அசதியாடற் கிடனுகு மெனக் கொண்டு, கருதிய பொருட்டுச் சிறப்புச் செய்ய வேண்டி, நக்கீரர், வேண்டுஞ் சொல்லின் வழி, காரணச்சொல், இடுகுறிச்சொல், காரண விடுகுறிச் சொல், இலக்கணச் சொல். குறிப்புச் சொல் முதலாயவற்றையும் இயைபுபட, ஓசை நலன் கருதிப் பகுத்துணர்ந்து கையாண்டு வழங்கியுள்ளார்.

ஆசிரியர் நக்கீரர், தமிழ் நறுஞ் சொற்களின் தன்மையினை நன்கறிந்து அவைகளில் உளதாகிய பல்வேறு சிறு சிறப் பொலித்துணுக்குகளை நன்குணர்ந்து, சொற்களின் தெளிவு கருதி அரிய ஒலிகளை எளிய ஒலிகளாக மாற்றியமைத்தும், வளர்த்தும், கருத்துச் செல்வத்தைப் படிப்போர் கேட்போர் முதலானோர் மன நிலைக்கு இயைய, உயிர்ப்புமிக்க நெறியில், வளம்படுத்தியுள்ளார். இதனுனே, இவர் வழங்கும் சொற்கள், உயிர் வாழ்க்கையுடன் தொடர்புள்ள ஒலி நயமும், உணர்வுச் செல்வமும் மிக்குடையன: முயற்சி எளிமையாய எழில் நலத்தை இயல்பாய் உடையன; புலன்களுக்கு இணையற்ற இன்பமும் அறிவும், மெய்ம்மையோடு இயைவுறப் பயக்கும் பண்பின: ஒளி மிகுந்து அளிசுரக்கும் பான்மையன: கூரிய அறிவும். சீரிய சுவையும், காரிய நோக்கும், கற்பனையனுபவத்து வீரிய விளை வும் பயந்து நிற்பன: தீது செறுக்கும் பான்மையால். எக்காலும், நற்செயற் பழக்கங்களில் மக்களை மெய்ம்மையிற் பழக வாயில் கோலி நல்லொழுக்கத்தில் படிந்து விளங்க வைக்கும் பெற்றிமை யுடையன: இலக்கண வரம்பும் இலக்கிய அமைதியினையும்

நிலைக்கலனைகப் பற்றிக் கொண்டு நிலைபெற்று வழங்கும் செவ்வி யினையுடையன.

பண்டைக் காலமுதல், இலக்கியத்தில் நாள்தொறும் வழங்கும் இலக்கிய மொழியில், செது மொழி நீத்து, நாகரீக முறையில், நக்கீரர், புதுமுது மொழியினைப் பயன்படப் படைத்து, அதனையே மக்கள் பலர்பால் பயிலும் பேச்சு மொழியாக ஆக்கியுள்ளார், பேச்சில் வழங்கும் சொற்களிலேயுள்ள நுண்ணியதும் எளியதுமாகிய ஒலி நலத்தை, சீர். தளை, எதுகைமோனை வகையில் உண்டாக்கி, உயர்ந்த உள்ளத்து புத்துணர்வுச் செல்வத்தை பாட்டினிலே ஓயாது வழங்குமாறு செய்துவிடுகிறுர். வாழ்க்கைக்குரிய அறநெறியில் பண்பட்ட இன்ப அன்பினை விளக்குவதாக அமைந்த இவரது பாக்கள் இவரது சொல்லாற்றலின் தன்மையினை ஊழி ஊழிகாலம் காட்டும் தகைமையால், சொல்லிற்கீரர் என்ற பழமொழிப் பாராட்டுரை நெடிது வழங்குவதாயிற்று

நற்றமிழ் வல்லுநராய நக்கீரரது மாசற்ற இனிய சொற்களின் மூலம், புலமை நலம் மிக்குடைய அவரது உள்ள நிலைகள் ஒருவாறு புலப்படும்; மற்றும் அவரது மன இயற்கை நிலையினை அவர் தம் சொற்களானே, ஆய்ந்தறியப்படும். அவரது சொற்களை, மதியூன்றி நோக்கியுணர்வார்க்கு அவரது சொல்லாற்றல் அவரது தூய உள்ளத்தின் ஆற்றல் வழித்தாய்ப் போந்தமை அறியப்படும்: அவரது நோக்கும்வாக்கும் தழுவிய தெய்வீகக் காட்சியின் மாட்சிமையும் எளிதில் புலப்படும். மற்றும் பொருளுணர்ச்சியினைக் கொண்ட சொற்களின்வழி, எடுத்த பொருளை பளிங்கு போற்றுலங்கமாகக் காட்டித் தன் நல்லிசைப் புலமையினை வயங்க வைத்தார். உலக வியற்கை மக்களியற்கைகளிலுள்ள உண்மை வனப்புகளை தன் புலமையால் உள்ளவாறுணர்ந்ததால், நக்கீரர் அவற்றை சிறு சொற்களின் வழி கூறி மகிழும் திருந்திய மெய்யறிவு மிக்காராய் யிருந்தமை தெளியப்படும். அறிவை அகமுகப்படுத்தி உணர்வினை யெழச் செய்து இன்பத்தின் கண்ணிருத்தும் இயல்புடைய இயற்கையின் வியத்தகு தோற்றங்கள் செறிந்திருக்கும் அளப்பருங் காட்சி நலனும் எழில் வளனும் இவரது நோக்காலும் வாக்காலும் இயல்வழாது மிளிர்வதை இவ்வாடைப்பாட்டின் கண் காணலாகும். மற்றும் உணர்வொளி யூட்டும் தகைமை வாய்ந்த இயற்கைப் புறப் பொருள்களின் எழிலுறு தோற்றங்களைச் சொற்செட்டோடு பாட்டின் கண் ஆங்காங்கு விளங்கக் கூறி, கீரர் நம் அகக்கண்ணெதிரே காட்டும் புலமைத் திறம் நினைதொறும் வியந்து

பாராட்டத் தகுவதாய்த் திகழ்கிறது. ஆசிரியர் நக்கீரர் தம் அறிவின் திறனுல் எத்துணைச் சுவைநலம் சிறு சொற்களால் பொருள் வேற்றுமை நலனேடு பெருக நுவலலாமோ, அத்துணைக் கேற்ப, நெடுநல்வாடையினை இயற்றியுள்ளார்.

பைந்தமிழ்ச் சான்ருேராய நக்கீரரது நாவினியல்பாலே அமைந்த பாவினியல்பில் அவரது வாக்கியலால். சொல்லும் பொருளும் அததுவாக வன்மையும் நலமும் முறையே அமை வுற்று மாண்புடன் நிற்பதைக் காண இயலும். சொற்களின் வழி பொருளை உற்றறியுமாறு நோக்கச் செய்வது. மனத்திற் பொருந்தச் செய்வது. மனோபாவத்தைத் தூண்டி மனனுணர் வினை யெழுப்பச் செய்வதென்னும் மூவகையால், நெடுநல்வாடை யினைப் பேசும் ஓவியமாகயாக்கியுள்ளார் கார் காலத்தில் கலக்க முற்று. கூதிர்ப் பருவத்தில் தெளிகின்ற அருவி நீர் போன்று நக்கீரரது சொற்கள் அருவி ஒலிகளின் விளக்கத்தையும் வேகத் தையுங் கொண்டு தெளிவு உண்டாகும் தன்மையதாய் இனிமை பயப்பன. கூதிர்க் குளிரையும் வடந்தைத் தண்ணுணர்ச்சியை யும் கூறுங்காலத்தும். சொற்கள் அவைகளைப் பொருட்படுத் தாதுமாறு நமக்கு அறிவித்து விழுமிய நடையாண்மையோடு செல்லும் போக்கு தெளியப்படும். நக்கீரரது சொற்கள், மெது வாக ஏகும் அருவி நீர் வழிக்கட் பரந்து கிடக்கும் கற்கள் ஒவ் வொன்ருேடு மோதுண்ணலாலுண்டாகும் செவிக்கினிய ஒலி யோசையினையுடையனவாய். உணர்வுடையார் நெஞ்சத்தில் பல பல நெகிழ்ச்சிகளை எழுப்பிக்கொண்டே நிற்கும். உற்று நோக் குழி. நக்கீரரது நயமாய சொற்களுக்குள்ளே நட்டுவனுரிருந்து இனியதாள ஒலியை எழுப்புவது போன்று என்றும் ஒலி ஒலித் துக்கொண்டிருப்பதால், அச் சொற்களின் ஒலி. ஒளி, உயிர் முதலியவை முடமாகக் கிடக்காமல் என்றும் செயல்பட்டு உரமும் தெளிவும் நுட்பமும் பெறும் இயல்பு கொண்டுள்ளன. இத் தகைய சொற்களின் செறிவின் சிறப்பால் பொருட் பொலிவுடைய வாடைப்பாட்டு, மேற்போக்காக உணரயியலாத உண்மையாய உள்ளுணார்ச்சியமைந்த அடிகளைக் கொண்டு. சீரும் அசையும் மாத்திரையுங் கூட நயப் பொருள் அளிக்கும் பான்மையில் அமைந்துள்ளது. நக்கீரரது சொற்கள், என்றும் மூடுவதும் விழிப்பதுமில்லா அறிவுக் கண்ணிமையொடு சிறந்து நிற்ற லான். அவை யுணர்த்தும் பொருள்கள் ஒலி நயங்களில் கேட்டு மகிழும் வண்ணம் வாழ்வு பெறுகின்றன. அவை, மனத்தை பாட்டின் பொருளோடு ஒருமைப்படுத்தி நிலைநிற்கச் செய்யும் வகையில் மாருன எழில்கொண்டு வாடைப்பாட்டினைத் தெய்வப்

படைப்பாக மிளிர வைக்கின்றன. இதனுன் நலனுற்ற புலனுடைய நக்கீரரது சொற்கள் இறைவன் தொழில்களாய ஆக்கல், அளித்தல், அழித்தலாகிய முக்குணங்களைப் பெற்று, இழுமெனு மோதையினெழுகுறு மருவி போல் நடை நலத்தால் ஒழுகும் நீர்மையுடையன வென்பது அறியப்படும்.

ஆசிரியர் நக்கீரர் பெரும்பாலும் எடுத்தாளும் சொற்கள் இலக்கிய வழக்கிலும் பேச்சு வழக்கிலும் வாழும் சிறு சொற்களே. இத்தகைய சொற்கள் வாழ்வினைச் செம்மை படுத்தும் கருத்துக்களின் அறிகுறிகளாதலான், கீரர் அவற்றை அழகுற இழைத்துச் சாணைபிடித்து மின்னிப் பொலியச் செய்து விடுகிருர். 'வையகம்பனிப்ப' (1) என்பதில், 'வையகம்' என்பது நிலத்தையும், நிலத்தில் வாழும் மக்களையும் குறிக்கும். 'பனிப்ப' என்பது குளிர எனவும் மக்கள் மகிழ்ச்சியுற என்பதனையும் குறிக்கும். 'கொடுங்கோல்' (3) என்பது முனையில் வளைந்துள்ள கோல் என்பதையும் கொடிய கோல் என்பதனையும் உணர்த்தும். 'கைக்கொள் கொள்ளியர்' (8) என்பதில் குளிரைப் போக்க கொள்ளியைக் கையிலே கொள்ளும் கோவலர் என்றும் கையைத் தேய்த்து அதில் கொண்ட வெம்மையைக் கவுளிலே சேர்க்கும் கோவலர் என்றும் பொருள்படும். நக்கீரர். பொருளுணர்ச்சியினைக் கொண்ட சிறு சொற்களில் பல பொருள்கள் தோன்றும் படிச் செய்து விடுகிருர் ஒரு பொருளின் பெயர் அதனேடு தொடர்பு கொண்ட பிறிதொரு பொருளைக் குறிக்குமாறு கீரர் வழங்கியது அவர் தம் சொல்வன்மையினையும் சொல்லமைப்புத் திறனையும் சுட்டிக் காட்டி விளங்கவைக்கும்.

பண்டைத் தமிழ் மக்கள் பேச்சு மொழியினைக் கேட்கவேண்டுமாயின், அதனைப் பக்குவமாக எடுத்துக் காட்டும் நக்கீரரது பாக்களைப் பாடிப் பார்க்க வேண்டும். மற்றும் ஊன்றிப் படிக்க வேண்டும். அதன் வழி பேச்சுமொழி காலப்போக்கில் வாழ்வுக்குக் கருவியாகவுள்ள துறையில் எந்தகையவாறு உரமும் தெளிவுங்கொண்டு தமிழ் மக்களது உண்மை அனுபவப் பண்புகளையொட்டி அழுத்தம் திருத்தமாக எடுத்த பொருளினை எளிதில் விளக்கும் திறனுடையதென்பது ஐயமின்றி உணரப்படும். மக்கள் வாழும் நெறியில் கருத்துக்கள் புலனுகுமாறு சொற்கள் பொருளுணர்ச்சியினைத் தரும் வகையினை வாடைப்பாட்டின் வரிகளில் காணலாகும் 'இன்னே வருகுவரின் துணையோர்' (155) என்றதில் இன்னே (இன் + ஏ) எனும் சொற்கு இப்பொழுதே என பொருள் தோன்றும்படியும், இன்துணை என்பதில் இனிய

துணை என்ற இனிமைப் பொருள் பொருந்துமாறும் நக்கீரர் செய்து விடுகிறார். 'இன்னே பெறுதி நீ முன்னிய வினையே' என்பது திருமுருகாற்றுப்படை. 'இன்னே' என்ற சொற்கு விரைவுப் பொருளினை யுணர்த்தும் இனிமைப் பொருண்மை உளதாந் தன்மை குறிக்கப்பட்டுள்ளதும் காண்க.

'கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணு முறை நிறுப்ப' (70) என்பதில் சீறியாழ் என்பது ஏழு நரம்புகளைக் கொண்ட சிறிய யாழினைக் குறிக்கும். இசையில் ஈடுபாடுடைய மகளிர் தம் விரல்களைக் கொண்டு வார்தல் வடித்தல் முதலியவற்றால் எளிதில் நரம்புகளுக்கு வெம்மையூட்டிப் பண்ணினைமுறையாக யாழில் பண்புற நிறுத்தி யாழிசையினை எழுப்பினரென்பது அறியப்படும். மற்றும் குளிரின் மிகுதியால் நிலைகுலைந்த யாழ் நரம்புகள் ஒழுங்காக ஒலிதரும் தக்க தன்மையில் திரிந்தமையால் யாழ் பண்ணு முறையினை மகளிர் நிறுத்தி இசையின்ப மில்லாது வருந்தினர் என வேறு பொருள் படுமாதலையுமுணர்க. 'துளி தூங்க' (28) என்பதில் 'தூங்க' என்பதற்கு மழை மாறுமல் வீழ எனக் குறித்து. 'சிலம்பிவானூல் வலந்தன தூங்க' (59) என்றதில் தூங்க என்பதற்குத் 'தொங்க' எனப் பொருள் புலப்படுமாறு செய்து, நக்கீரர், பல பொருள்களைக் குறிக்கும் கிளவிகள் இலக்கிய வழக்கில் நின்று விடாது பேச்சு மொழியில் நிலவும் வழக்கினையும் வகையுறுத்தியுள்ளார். 'வேறு புலம் பரப்பி' (4) 'மாமேயல் மறப்ப' (9) என்றதில் ஏறுடையினம் ஊரிற்றங்காது வேற்றிடத்தில் பரந்து நின்று மேய்தலை விட்டு விடாது எனது மறந்தொடுங்க எனக் குறித்து நக்கீரர், அவ்வினம் குளிரின் நினைவினை மட்டும் கொண்டுள்ளதால், மேய்தலில் கருத்தின்மையினைப் புலப்படுமாறு வகை செய்துள்ளது அறிக. 'வண் தோட்டு நெல்லின் வருகதிர்' என்றதில் 'தோடு' என்ற சொல்லில் நுண் பொருள் விளங்குமாறு கீரர் உணர வைத்தார். நெல், புல்லாதலின், நெற்கதிரை மூடியுள்ள இலை போன்றதை நயப் பொருள் தோன்றுமாறு 'தோடு' என்றார். இலை மரத்திற் குரியதாதலின் அதனை நக்கீரர் கூறிற்றிலரென்பது கருதத்தக்கது; 'முடலையாக்கை முழு வலிமாக்கள்' (32) என்பதில், வலிய உடலைப் பெற்றும் உயிரின் ஊதியத்தை அறியாதவராதலின், மக்கள்' எனாது 'மாக்கள்' என்றார். 'இன்னா அரும்படர் தீர' (16) என்றதில், தலைவன் வரும் வகையாலன்றிப் பிறி தொன்றால் தீர்க்க இயலாத நினைவு நோய் என்பதனைப் பெறுமாறு ஆசிரியர் நக்கீரர் கூறியது சாலவும் உண்மை மேவியது. துவலை தூவா நிற்க என்பதற்குத் 'துவலைகற்ப' (20) எனக் கூறி மிகப்

பெய்தலின் இயல்பினை நுட்பமுறக் கீரர் உணர வைத்தார். மாலைக் காலத்தைச் சுட்ட 'பகலிறந்து' (34) எனப் பொருட் செறிவுபட அழகாகவும் சுருக்கமாகவும் மொழிந்துள்ளார். ஒலிகள் பல் வகையாயினும் பிறநாட்டு மக்களுக்கெல்லாம் ஒலிக்கும் ஆற்றல் ஒரே தன்மையில் அமைந்திருப்பதைச் சுட்ட. தட்ப வெட்ப நிலைக்கியைய எழும் கொழுந் தமிழின் சிறப்பொலிக் குறிப்புகளை 'கல்லென்துவலை தூவ' (64) 'தவ்வென்று அசை இத்தா துளி' (185) என ஆசிரியர் கீரர் தெளிவுறுத்தியுள்ளார். ஒலி நயம் பற்றி நிலைபெறும் பொருட் சிறப்புடைய சொற்களை. நக்கீரர் எடுத்தாளும் திறனல், சொற் பொருள் அணிகளும், வழி யெதுகை முதலிய தொடை நயங்களும் இப்பாட்டினிலே இயல் பாகவே அமைந்துள்ளன. 'நளி மலைச் சிலம்பிற் சிலம்புங் கோயில்' (100) 'அறு அறு காலை தோறும்' (104) என்றதில் சொற்பின் வரு நிலையணி காண்டற்குரியது.

பிறமொழிக் கலப்பால் பைந்தமிழுக்குப் பிற்றை நாளில் பெரியதோர் ஏதம் விளையும் எனக் கருதி, நற்றமிழ்க் கீரர். முன்னொரு கால் வழங்கப்பட்டுப் பயின்று வந்த 'கருப்பக்கிரகம்' என்ற வட சொல்லினைக் கூருது 'கருவொடு பெயரியநல் இல்' (114) எனத் தமிழ் மொழியின் பண்புக்கும் இலக்கணத்திற்கும் ஏற்பத் தமிழோசைப்படுத்தித் தெளித்துக் கூறியுள்ளது அறிதற்பாலது. இதன் வழி ஒல்லும்வகை பிறமொழிக் கலப்புகளை யொழித்து, நக்கீரர், ஓசை நயமும் மூவாத இனிமையுமுடைய சொற்களாலாய பழந் தமிழ் வழக்கை நிலைநிறுத்தும் நோக்குக் கொண்டு கற்கக் கற்க நாவூறும் செறிவுடைய சொற்களையே வழங்கியுள்ளாரென்பது இனிதுணரப்படும். கருதிய பொருளை புலப்படுத்த உதவும் நுண்ணிய சொல்லமைதிகள் பலவும் பொதுளத் தேக்கி விழுமியது தெளியப் பயக்குமாறு, கேடில் விழுச் செல்வராய நக்கீரர், நெடுநல்வாடைப்பாட்டை யாத்தருளினரென்பது இதுகாறும் கூறிய வாற்ருல் நன்கு துணிந்து கொள்ளப்படும்.

வாடைக் குளிரினைப் போக்கும் வகைகளை, நெடுநல்வாடை பாட்டில், நக்கீரர் நேரிற் காண்பது போல் நம் நெஞ்சின் கண்ணே நெடுமையில் நிற்குமபடி தெளியவைத்ததும் ஈண்டுக் காண்குவம். கோவலர்கள் பற்பறைதாக்க வருத்தும் குளிரை அகற்றத் தம் கைகளை வெம்மையுறத தேய்த்துத் தம் கவுள்களில் வைத்துக் கொள்வதையும், குளிர் தெறித்தோட, உடலுக்கு வெம்மையும் வலிமையும் தரும் தேறலை. பொருள் வலிகொண்டு

திரியும் நகர மாக்கள் உட்கொள்ளுவதையும், இல்லின் கண்ணி ருக்கும் மக்கள் தடவு கொள் செந்நெருப்பினைக் கனியச் செய்தும், அவ்வெம்மையில் குளிரையும் போக்கிக் கொள்வதையும், மக ளிர் தம்முடல் சூடு பெற நறுமணச் சாந்து பூசியும், நறும்புகை ஊட்டிக் கொள்வதையும், நக்கீரர் விளங்க வைத்தார். உள்ளத் துட் கொண்ட வழிபாட்டின் வழியாலும், இசையில் ஈடுபடும் ஒருமை மன வளர்ச்சியாலும் மெல்லியல் மகளிர் தம் குளிரை நீக்கிக் கொள்ளும் நீர்மையினை விளக்கி அறிவியற்றுறையில் படி யும் மனத்தின் இயல்பையும், வழிபாடுதரும் வன்மையையும் வளத்தையும் உணர்த்தியுள்ளார். வாடையின் கொடுமையினை யும், அன்புடைக் காதலரது பிரிவின் துயரையும் மறக்கச் செய்ய, காதலர் தம்மிடம் வருந்துணையும் இன்குரற்சீறியாழினை அருந் துணையாக்கொண்டு அரிவையர் யாழிசை கூட்டி, அதிகமாகப் பெருகும் பிரிவுத் துன்பத்தை இசையின்பத்தில் அழுந்தச் செய்தனரென்று நக்கீரர் இசைத்து, வாடைத் துன்பம் எவ்வாறு அறிவியற்றுறையிலும் இன்ப அன்புறு செயல்களிலும் முடிகிற தென்பதை நோக்கியுணருமாறு வகை செய்து, துன்பமுற்றோர் இன்னிசை கேட்டதும் மனமகிழ்ச்சியுறும் இயல்பினை விளங்க வைத்தார் இதனுன் நல்லியல் அரிவையரது அகவொழுக்கம் கூறும் இப்பாட்டு, மன இயல்களின் கூறுபாடுகளை விளக்கி மனக்கவலையினை மாற்றும் வழியையும், மனமிறக்கக் கற்கும் நெறி யினியல்பினையும் உணர்த்தும் சால்புடைத்து.

நெடுநல்வாடைப் பாட்டு, யாவற்றிலுங் கலந்த தெய்வ நிலை யோடு இயற்கையை உடலாகக்கொண்டு, யாவற்றையுங் கடந் துள்ள நிலையின் உண்மையினை உணர்த்துவதாகும்: மற்றும் மக்கள் மனத்திற்கும் தெய்வ வழிபாட்டிற்குமுள்ள இயற்கை இயைபினைக் கொண்டு, தெய்வ உண்மைஎத்தகையவாறு நம்பிக் கையை ஊட்டி ஒட்டி நிற்கும் மாண்புடையதென்பதை வற்புறுத் துவதாகும். சிந்திக்கின், தெய்வ வழிபாடு துன்பத்தை ஓரள வில் போக்கிக் கொள்ள உதவும் ஒரு நேரிய முறையாகும். அது மெய்க்கும், அன்புள்ளத்திற்கும் புகழுரைக்கு உரியது; அத னில் அறிவு, இச்சை செயல் ஆகிய மூன்றும் ஒன்றும்.

தெய்வ நலஞ் சான்ற மெய்யுணர்வினரான நக்கீரர், இப் பாட்டின் கண், போரின் வெற்றி, வெறும் படை வலியால் விளை வதல்ல யென்றும், படையினுஞ் சிறந்த மாட்சியையுடைய அற நெறியை அது முதலாகயுடைய தென்றும், வழிபாட்டின் வழி கொற்றவையின் பேரருளும் அவ்வெற்றிக்கு இன்றியமையாத

தென்றும் சுட்டி விதித்து நிறுத்தியதூஉம் காண்க. வழிபாட்டில் தலைப்பட்டார், விதியை விதிக்கின்ற இறைவனையறிந்து பற்றிக் கொள்ளுவதால் அன்னவருக்கு விதிவழி நேரும் துன்பங்களில்லையென நுட்பமுறக் கீரர் வழங்குங் கிளர்ச்சியும் இன்பமும் மாணப் பெரிது: அன்பு செய்யா வாடையின் இயக்கச் சக்தியோடு தொழிற்படும் மனோ சக்தியை இணைத்து, வழிபாடியற்றுவதின் வழி, மக்கள் தங்கள் துன்பத்தைப் பெருஅளவாகப் போக்கிக் கொள்ளவும், மற்றும் தாங்கிக் கொள்ளும் வல்லமையும் பெறுதற்கும் இயலுமென்ற உண்மையினை நக்கீரர் உணர வைத்தது இனிது புலனாகும்.

இயற்கையில் தெய்வக் காட்சியினைக் காணும் கீரர், மகளிர் கொழுஞ்சுடர் விளக்கின் ஒளிவடிவில் இறைவனை வழிபட்டதைக் கூறிப் பின்னர், ஆடல் மகளிரின் மனம் இடர்மிக்க குளிரிலும். உருவ வழிப்பாட்டையும் மீறி இன்பந்தரும் இசையில் ஈடுபட்ட இயல்பினையும் அறிவித்துள்ளார். தெய்வத்தினிடஞ் செல்வதென்றும் நுட்பத்தைத் தெளிவுறுத்தும் பல திறப்பட்ட இயற்கை ஓசைகளையும் சொல்லோசைகளையும், இப்பாட்டின் கண் குறித்த நக்கீரர், அறிவியல் அழகிற் றுறையில் விளங்கும் யாழிசை ஏனைய ஓசைகளுக்கும் மேம்பட்டுச் சிறந்து, அமிழ்தமாய் உள்ளம் புகுந்து வயப்படுத்தும் தன்மையோடு நலமூட்டும் பேராற்றலையுங் கொண்டு, புலன்கட்கும் கருவிகரணங்கட்கும் ஒருங்கே இன்பூட்டும் வாய்ப்பினையும், குளிரால் உறுவதாய துன்பத்தை மறக்கச் செய்யும் இசையின் இயல்பினையும் பண்பாட்டினையும் நவின்றருளினர்.

வழிபாட்டினியல், நெடுநல்வாடைப்பாவில், பாவிடையாடு குழல் போன்று கரந்து பரந்து, படிப்போர் மனதைக் கவர்ந்து கொள்ளும் தன்மையவாயுளது. கோவலர் தன்னலமற்று ஆக்களின் நலன் நோக்கி அவைபால் அன்புடைமை காட்டும் தகைமையால், அவர் தமக்கும் அன்புடையராய்த் தம்மிலுள்ள அன்பில் ஒன்றும் தெய்வக் காட்சியினை, நக்கீரர் புலனாக வைத்தார். உலகம் ஓம்புதற்கென்றே உலகிடை வாழ்ந்து உயிர்களுக்கு அன்புத் தொண்டு செய்வதில் கருத்திருத்தி வாழும் காவலரும் காமம் நீத்த பாலினுல் திகழும் பாசறையின்கண், நெருங்கிப் பழகுவோரிடத்தும், பழகாதவரிடத்தும் வேற்றுமை தோன்று வகையில் அன்பும் அருளும் செலுத்தும் நீர்மை, உண்மைத் தெய்வவழிபாடென செவ்விதில் அமைத்து விளங்க வைத்தார். மற்றும். தலைவியினிடத்தே நாளொடு மிடைத்த கற்

பின் ஒழுக்கத்தழகிலும் விழுமிய காதலிலும் தெய்வ இயலை நக்கீரர் சுட்டிக் காட்டி, தலைவியர் அரண்மனையில் தனியிடத்திலமர்ந்தபோது எவ்வாறு தன்னுள்ளத்து வாடாமலரில், கடந்த பொருளாக நிற்கும் தன் தலைவன் தன் கண்ணுக்கு விருந்தாகும் பெற்றியில், குலமகட்குத் தெய்வம் கொழுநனே எனும் நல்லுரை கடவாது அவன் வழிபாட்டிலும் காதன்மையிலும் குறைவு படாது காட்சியளிக்கும் திறத்தையும் புலப்படுத்தி நந்தாமணி விளக்கனைய தலைவி எற்றுக்குப் பிற 'தெய்வம் தொழா அள்' என்பதையும் குறிப்பாக உணர்த்தி, பாட்டுடைத் தலைவனும் தலைவியும் அறத்தின்மேல் மன நிகழ்ச்சி கொண்டு சிறந்தது பயிற்றலைத் தெளியவைத்தார். வாடைத் துன்பத்தில் படும் மக்களுயிர்களின் வழிபாட்டியிலின்வழி, நக்கீரர், தெய்வ நினைப்பால் உயிர்த்து மக்களன்பில் மலரும் தெய்வ அன்பினை விளங்க வைத்தது ஈண்டு உன்னற் பாலது. கூர்ந்து உன்னினால், வாடைக் குளிரின் இடரினை எதிர்த்து நிற்காது, இறைவனதிச்சையால் வருவதை பொறுமையுடன் ஏற்று பற்றின்றிக் கடமையினை புரிந்து, சோதனைக்கு இரையாகாது அதனில் தேர்ச்சியுற்று வழிபாடியற்றுவது இப்பாட்டின் உள்ளுறையாக அமைந்த அறவுரையாகுமென்பதை உன்னும் அளவிற்கு உண்மை புலனாகும். மகிழ்ச்சியுள்ள இடத்தில் சிறப்பயர்ந்த வழிபாடு நடைபெறும் இயல்பினை விளக்க வந்த ஆசிரியர் நக்கீரர், ஒழுக்கத்திற்கும், அருளுடைமைக்கும், தவத்திற்கும் துணை செய்யும் வாடை, தெய்வ வழிபாட்டிற்கும் துணைமையாயிருக்கும் வகையினையும் புலப்படுத்தி, இறைக்குரிய பெருமையும் எல்லைகடந்த நிலைமையும் வாடைக்குளதாகு மென்பதை பாட்டின் உள்ளுறையாகக் கரந்து மிளிருமாறு வைத்துள்ளார் வாடையால் உயிருறு மின்னலையும், வழிபாட்டால் அஃதெய்துமின்ப நிலையினையும், செவ்வறிவுப் பேறு வாய்ந்த தெய்வப் பெற்றியராய நக்கீரர், தெளியப்படுத்தி, உயிரறிவைப் பெருக்கி இறையருளுணர, நெடுநல்வாடையெனும் பாட்டை கருணை கலந்த கலை வெள்ளமாகவும் உண்மைப் பொருளொளி வீசும் அறிவுநூலாகவும் ஆக்கியுள்ளார்

நுண்ணறிவு வாய்ந்த நக்கீரரது கலை. அன்பையும் தூய காதலையும் பெருக்கி, மனத்தைப் பண்படுத்தி, வாழ்வியலின் அழகினையும் ஒழுக்க உணர்ச்சிகளையும் தனித்த புரட்சியுடன். சீரிய முறையில் தெளிவு படுத்தும் பான்மையது. கீரரது கலை, இறை வாழ்வை கூட்டுவிக்கும் இயல்புடைய இயற்கை வாழ்வின் அழகினைக் கூருமற் கூறுகிறது. ஒழுக்கத்தையும் விருப்பத்தையும் வளர்த்து மனத்தின்கண் கருணையைத் தூண்டுகிறது. தவழ்ந்து

செல்லும் தென்றல் எவ்வாறு நறுமணத்தைத் தெரிந்து சுமப்பதில்லாது, தன்னையறியாத அதன் காரியத்தின் பயனுய் நுகர்தலைச் செய்வானுக்கு இன்ப சுகத்தை யளிப்பது போன்று, கீரரது கலை அமைந்துள்ளது. இவரது கலை கற்பனையையும் வளர்த்து அதன் ஆற்றலையும் இயக்கிப் பெருக்குவதினுன், வருந்தும்படி வீசும் வாடைத் துன்பத்தின் தொடர்புபற்றிய இயற்கை இயல்பு, நல்லின்பமாக மாறி நெடிது இனியவை பயக்கும் கவியாக மலர்ந்து, அழகொளி தாங்கி அறிவின் மணம் கொண்டுள்ளது.

வாழ்வுப் பேற்றினை விளக்கவைக்கும் அகப்புற இயல்புகளை அறத்தினின்றும் பிறழாதவாறு, நக்கீரர் நயம்படவுரைத்து அகவொழுக்கத்தின் அமைதியின் மூலம் மெஞ்ஞானத்தையும், புறவொழுக்கத்தின் வளர்ச்சியின் வழி விஞ்ஞானத்தையும் புலப்படுத்தி விடுகிருர். வாடைமீது நக்கீரரது அன்பு நோக்கு உளப்பட, கடுங்குளிர்தரும் கொடிய வாடையும், பொற்கோட்டிமயஞ் சார்ந்த கருங்குருவி உருச்சிறந்து பொன்னுெத்துக் தோன்றுவது போன்று, அன்பு வண்ணத்திற் படிந்து நல்லதாகின்றது இதனைத் தெளிவுறுத்த, உயர்திணை உயிர்களுக்கும் வாய்ந்துள்ள அன்பு படிப்படியே வளரும் விளக்கத்தையும், பிறர்க்குப் பயன்படும் அன்புச் செயல் நலத்தையும் இயற்கைக் கூட்டுறவுகளோடு காட்டியுள்ளார். இத்தகைய சூழ்நிலையில் அன்பற்ற வாடை இருத்தல் அரிதாதலின், நக்கீரர் உலகை அன்பில் வளரவிட, வாடைக்குள்ள இயலை மாற்றும் உள்ளக்கிடக்கை கொண்டு, நெடுநல்வாடைப் பாட்டினில், பொதுச் சக்தியாக நிலவும் வாடை. அன்பு நலத்தோடியைந்த நெறி நின்று நெடுக ஒழுகும் வழியையும் நிலைநாட்டி வாடைச் செயல் யாவும் அன்பின் சார்பு கொண்டு நிகழ்வதை விளக்குவாராயினுர்.

உலகியலால் செய்யத் தகுவதும் பேணுதலும், மக்கள் அறிதல் வேண்டுமென்பதைச் சுட்டவே, அருந்தவத்தான் மனத்தூயரான ஆசிரியர் நக்கீரர், நெடுநல்வாடைப் பாட்டில், காதற் கற்பின் சிறப்பினையும், ஐம்புலனும் வென்றுன் தன் கடமை வீரத்தினையும், கடவுள்வழிபாட்டின் இயல்பினையும் நோக்கியுணருமாறு வகை செய்துள்ளது கருதற்பாற்று நோக்கியுணர்தற்குக் காரணமாய, நற்றமிழ்ப் புலமையுடைய கீரரது சொல்லமைப்பும், அச்சொல்லமைப்பின் சிறப்பின் வழி, உயிர்களின் உள்ள நிலைகளை ஊன்றி அறியும்படி நெறி வகுக்கும் அவரது நோக்கும், தெருளுறநோக்கி ஆயுங்காலத்து. அவரது படைப்பாற்றலையும் கற்பனை அனுபவத்தினையும் நடைநயத்தினையும், கலைத்திறனின் உரிமைப்பேற்றினையும், இப்பாட்டின்கண், வளம்படுத்தியுள்ளன வென்பது முடிபாம்.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

திருக்குறட் கருவூலம்

நக்கீரன் வழியடிமை வித்துவான். பி. மா. சோமசுந்தர முதலியார்
இராணிப்பேட்டை.

ஆகலின் அறம்பொருளின்பவாழ்வில் வீடுபொலிதல் அவர்க்கு நனிவிளங்கிற்றென்ற கட்டுரை கரிசுரையாகிக் கழிந்ததென்க.

(ஈ) வீட்டைப்பற்றிய தனி நூல்கள் பெருகின காரணத்தையுங்காண்பாம். தமக்கென ஒரு மொழியிலராய் ஆடுமாடுகள் மேய்த்துவந்தோர் அஃடு வளர்ப்பான் கருதி வடமொழிப்பயிற்சியிற்கருத்தூன்றி மறை கற்று, அதன்கண் விதித்துள்ள கருமங்களையாற்றுந் தக்காருந் தாமே என உரிமைகொண்டாடினர். அதுநோக்கித் தமிழராவார் வடமொழிக்குரியார் அவரேயெனத் திரிபுணர்ச்சி யெய்ந்து அம்மொழியைப் புறக்கணித்தனர் ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை யோட்டிய கதையாயிற்று. என்னை? வடமொழியோ, அம்மறைகளோ அவருடைமையேயன்று. எம்மொழிக்குச் செல்வாக்குள்ளதோ எம்மொழி இன்ப வாழ்வுக்கு வழி காட்டுமோ அம்மொழியைக் கற்று வயிறுவளர்த்தலே அவர்தமியற்கையாம் இற்றை ஞான்றும் அவர் வடமொழியைக் கைமிகந்து ஆங்கிலங் கற்க விரைதலும் இந்தியைப் பயில விரைதலு முன்னுக. பார்ப்பனர்க்கே உரித்தென்று பகரப்படும் வடமறை பெரிதும் பார்ப்பனரல்லாதாராலும் பெண்களாலுமே யாக்கப்பட்டது. ஆயின் பார்ப்பன ரொழிந்த ஏனையரும் பாவையரும் மறை பயிலல் கூடாதென்னும் வஞ்சக் கருத்து நிலவுவதுந் தீயூழேயாம் உண்மையைத் தன்னுழை மறைத்து வைத்துக்கொண்டுள்ள காரணத்தான் எய்திய ''மறை'' என்னும் பெயர், பார்ப்பனால்லர்க்கும் பெண்களுக்கும் மறைக்கப்பட்டதால் வந்தது என்னும் விளக்கம் பெறவே எண்ணுங்கால் சோக நிரம்பிய நகையே தோன்றும்:

பேசுமொழியாந் தமிழில் அறம் பொருளின்ப விலக்கணங்களை அறிவுறுத்தும், பேச்சற்ற வடமொழியில் வீட்டைக் கருவி வகையாலறிவுறுத்தும். வதந்னர் பண்டைச் சான்றோர் - வடமொழி தமிழரிடத்திருந்தும் பறிக்கப்படலும் வீட்டையுமுணர்த்தல் தமிழுக்குரிமையாயிற்று. அவ்வாறுணர்த்தும் அந்தணர் பலர் ஈண்டுத் தோன்றினர். அவர் தம்மில் முதல்வராவர் திருவள்ளுவரேயாம். வேதந் தமிழ்ப்படுத்துவான் அருளாளர் தோன்றினரென்பது,

"என்னைநன் ருக விறைவன் படைத்தனன்
தன்னைநன் ருகத் தமிழ்செய்யு மாறே" எனவும்
"சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே"

எனவும் திருமூலர் அருளிச் செய்கையானுணரப்படும். ஆகலின் வீட்டு நூல்களின் தோற்றம் இன்றியமையாவொன்றே என்பது தேர்க.

(உ) "பெண்ணை வெறுத்தல் என்னும் போலித் துறவையும் நுழைத்து நல்வாழ்வுக்கிடர் செய்தன" என்னுங் கூற்றின் வன்மையுங் காண்பாமாக 'பெண்ணை வெறுத்தல்' எனற்கு இப்பெரியார் கொண்ட பொருள் தக்கதே கொல்? தக்கதேல், பெண்ணை வெறுத்தல் என்ற குற்றத்துக்குப் பேரருட்புலமை சான்ற ஔவையார் என்ற பெண்பாற் புலவரையே ஆட்படுத்தல் நேரும். என்னை? அவர்தாம்,

"ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொத்துற் — ருதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு,

எனப் பெண்ணை வெறுத்தற்குக் கற்பிப்பாராதலினென்க. மற்றும், "பரனை நினைத்திம் மூன்றும் விட்டதே பேரின்ப வீடு" என்றுரைத்து அறம் பொருளின்பங்கள் வீடாகாவென்றறிவுறுத்தலான், திருக்குறள் விரிவுரையாசிரியர் கருத்தையும் முரணினுரென்க.

'பெண்ணை வெறுத்தல்' என்பது பெண் பிறவியையன்று, அவரும் வீடு பேற்றுக்குரியரேயென்க. மற்று யாதோவெனில் பெண்ணின்பம் விழைந்து பேதுற்றுப் பிறவியின் பயனையிழத்தலையே அருணலஞ் சான்ருர் கருதிக் கூறினர் என்க அறம் பொருளின்ப நுகர்ச்சியில் திளைத்திருந்த பட்டினத்துப் பிள்ளையார் அதன் பயன் வீடு நல்குவதன்றெனல் தெளிந்தே துறவு பூண்டமையையுங் கருதுக இவ்வாறுணரமாட்டாத இவ்வாசிரியர் பட்டினத்தார் பாடல்கட்குரையெழுதி, அப்பாடல்களில் காணலுறும் பெண்ணை வெறுத்தலுக்குப் பொது மகளிரைப் பழித்தலே என்றொரு போலியமைதியையுங் கூறிக்கொண்டார்.

அற்றேலஃதங்ஙனமாக, இன்ப நுகர்ச்சி கடியப்படுவதேல், வள்ளுவர் காமத்துப்பால் வகுத்தது கசடுபடுமாலோவெனில் படாது. என்னை? காமத்துப்பால் திகழவேண்டுங் காரணத்தை மதுரை கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர் தம் களவியலுரையில் நன்கு காட்டினுர். அவர் தம் விளக்கமாமாறு கீழே காண்க.

"இனிக்காமம் நன்ருமாறுமுண்டு. சுவர்க்கத்தின் கண்சென்று போகந்துய்ப்பலென்றும், உத்தரகுருவின்கண் சென்றுபோகந் துய்ப்பலென்றும், நன்ஞானங்கற்று வீடு பெறுவலென்றும் தெய்வத்தை வழிபடுவலென்றும் எழுந்த காமங் கண்டாயன்றே! மேன்மக்களாலும் புகழப்பட்டு மறுமைக்கும் உறுதிபயக்கு மாதலின் இக்காமம் பெரிதும் உறுதியுடைத்தென்பது உறுதியுடைத்தாமாறு: அறுவகைப்பட்ட பாசண்டிகரும் இணை விழைச்சுத் தீதென்ப. அஃதுண்டாமிடத்துச் சுற்றத் தொடர்ச்சி யுண்டாம். உண்டாகவே கொலையே களவே வெகுளியே செருக்கே மானமேயென் றித்தொடக்கத்துக் குற்றம் நிகழுமென் பது. அது கேட்கவே. தலையாயினர் அதன் கணின்று நீங்குவர்.

"இனி இடையாயினர், பெண்ணெனென்பது எற்புச் சட்டகம், முடைக்குரம்பை, புழுப்பிண்டம், பைம்மறியா நோக்கப் பருந் தார்க்குந் தகைமைத்து. ஐயும், பித்தும், வளியுங், குடருங், கொழுவும், புரளியும். நரம்பும், மூத்திரபுரீடங்களுமென் றிவற்ற தியைபு பொருளன்று. பொருளாயின், பூவே சாந்தே பாகே எண்ணெயே அணிகலனே யென்றிவற்ருற் புனையவேண்டா, தானியல்பாகவே நன்ருயின் என்று அதன் அசுபத்தன்மை யுரைப்பக் கேட்டு நீங்குபவர்.

"கடையாயினர் எத்திறத்தானும் நீங்கார். என்னை? பல் பிறப்பிடை ஆணும் பெண்ணுமாய்ப் பயின்று போகந் துய்த்து வருகின்றமையின் அவர்க்கிது காட்டப்பட்டது.

"அது கேட்டு, இனியானுந் தவஞ்செய்து இதனைப் பெறுவ லென்று அதன் மாட்டு வேட்கையால் தவஞ்செய்யும், செய்யா நின்ருனைப் 'பாவீ! இதன் பரத்ததோ வீடு பேற்றின்பம்?" என்று வீடு பேற்றின்பத்தை விரித்துரைக்கும். அதுதான் பிறப்புப் பிணி மூப்புச்சாக்காட்டு அவலக் கவலைக் கையாற்றி னீங்கி, மணியினதொளியும், மலரினது நாற்றமும். சந்தனத் தது தட்பமும் போல உண்ணின்றெழுதருமொரு பேரின்ப வெள்ளத்ததென்பது கேட்டு அதனை விட்டு வீடுபேற்றின் கண்ணே அவாவி நின்று தவமும் ஞானமும் புரிந்து வீடுபெ றுவானுமென்பது. அவனை வஞ்சித்துக்கொண்டு சென்று நன்னெ றிக்கண் நிறீ இயினமையின் களவியல் என்னுங் குறிபெற்றது"

மேற்போந்த நக்கீரனருரையான் காமத்துப்பால் கழறலின் அவசியம் புலனும். சங்கத் தமிழின் தலைமைப் புலவராய நக்கீர

ருரே இங்ஙனம் பெண்ணை வெறுத்தும், அறம் பொருளின்ப வாழ்வில் வீடு பொலிதல் விளங்காதுரைத்துஞ் சேறலால் திருக்குறள் விரிவுரையாசிரியர் குறிப்பிடும் அறிஞர் நனவுலகின்கண் எஞ்ஞான்றும் விளங்கினரில்லை யென்ற துணிபே கோடும். வீட்டைப் பற்றியெழுந்த தனி நூல்களும் பழங் கொள்கைக்குத் துணைபோவனவே என்பதும் இதனால் துணியப்படும்.

இனிப் போலித் துறவு என ஆசிரியர் கூறியதையும் ஆய்வாம். நெஞ்சிற்றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து வாழும் வன்கண்ணர் வள்ளுவர் நாளினிலும் வயங்கினர். அதுகொண்டு வள்ளுவர் பெருமான் துறவைக் கடிந்தாரல்லர். பெண்ணைக் கடிதலால் போலித் துறவென்று பேசி எள்ளினாரல்லர். போலித் துறவிகளையே சொல்லாம் படை கொண்டு புடைத்தனர். மற்றும், துறவறவியல் ஒன்று படைத்து நிரம்பிய துறவின் இலக்கணமும் அறிவுறுத்திச் சென்றார். அறம் பொருளின்பங்களைக் கடியும் புறத் துறவையே போலி யென்றும்; சிந்தையை யடக்கியே சும்மா இருக்கும் அகத்துறவையன்றெனின், நன்று சொன்னாய். நீரான் அமையும் புறத் தூய்மை வேண்டா. வாய்மையானமையும் அகத் தூய்மையே வேண்டும் என்பார் கூற்றவலம் படுதலொக்குமிது என்னை? புறத் தூய்மையில்லார்க்கு ஊக்கம் மிகாது தூக்கமே மிகும் அதன் பயனாய் உடல தளர்ச்சியும் உளத் தளர்ச்சியுமுண்டாம், ஆகலின் வயிறு கருதியிவர் வஞ்சகம் பேசுவர். இவரிடம் வாய்மை வாழுமாறு யாது? இன்றே! நல்லதோரில்லம் புறத்துக் குப்பைகளானும், மலம், சிறுநீர் முதலியவைகளானுஞ் சூழ்ந்திருப்ப, அவற்றைக் களையாது, உட்புறத்தே அணி செய முயறல் என்ன பயன் தரும்? புறத்துக் கமழும் நாற்றம் அகத்தும் பற்றி இல் வாழ்வாரைத் தங்க வெட்டாது வெளியேற்றலையே செய்யும் புறத்துறவில்லா அகத்துறவும் அவ்வண்ணமே அறிவை வெளியேற்று மென்றறிக.

நீர்தான் சார்ந்த நிலத்தின் சுவையும் நிறமும் எய்தும். மலக்குழிக் கண் தங்கிய நீரைக்கண்டு. நீரையே பழித்தல் அறிவுடைமையாமா? அது போலத் துறவறநெறிக்கண் போலிகள் வாழ்தல் கண்டு துறவையே போலியெனப் பழித்தல் சாலாது. அன்றியுங் கயவர் யாண்டுமிருப்பர். கண்ணெனப் போற்றுங் கல்வித் துறையில் கசடரிலரா? ஆசு நிரம்பினோர் ஆசிரியத் துறையிலிலரா? வஞ்சநெஞ்சர் வணிகத் துறையிலிலரா? உலுத்தர் உழவுத் தொழிலிலிலரா? நொய்யர் நூலாசிரியத் துறையிலிலரா? உளர் அவர் உளராதல்கொண்டு கல்வித்துறை கசடுடைத்தென்று கடியலாமா? ஏனைய துறைகளை ஏசலாமா?

மேற்கூறியவாற்ருன் அறம் பொருளின்பங்களின் பயனே வீடு எனல் செந்நாப்போதார் கருத்தன்று என்பதும் அஃது விரிவுரையாளர் கருத்தே என்பதும் அவற்றின் வேறுபட்டதே வீடு என்பதும் இஃதே நக்கீரனர் இளங்கோவடிகள் முதலிய பண்டைத் தமிழாசிரியன்மார் துணிபென்பதும் பெற்ரும். ஊன்மிசையும் நாச்சுவை கொண்ட, கவிஞர் என்னும் விருதுடையாரொருவர்.

"உண்ணுமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
வண்ணுத்தல் செய்யா தளறு"

என்னுங் குறட்பாவைக் கண்டு பெரிதுங் கலங்கி நம்மையுட்கொண்ட நிரயம் பின்னர் உமிழ்தற்கு வாய்திறவாதேல் உய்தியின்றே யெனவுளம் வெருவி, தமக்கோருய்திகண்டு உளவமைதி பெறுவான் இக்குறட்பாவுக்குப் புத்துரை காண முயன்ருர். முயன்று "ஊனுண்ண அண்ணுத்தல் செய்யாதளறு." என்னுந் தொடர்க்கு" ஊனையுண்டற்கு நிரயமும் வாய்திறவாது என்ரெரு பொருள் கண்டு, அவ்வாறு கண்டதனுலேயே தம்மை நரகம் விழுங்காதென்று தேற்றிக்கொண்டு அமைதியுறுவாராயினர். ஊனுண்டலை நீக்குதலே செயற்பாலதெனத் தெளியாது ஓவ்வாப் பொருள் கண்டமைதியுற்ற இவரையொப்பவே, அறம், பொருளின்பச் சுவையாலீர்க்கப்பட்டு அவற்றின் பிணியினின்றும் வீடுபெற அறியாரும் தவத்தான் மனந்தூயராய சான்ருேர் "இம் மூன்றும் விட்டதே பேரின்ப வீடு" என விதித்தலைக் கண்டுவெருவி, மூன்றின் சுவையால் அவற்றைக் கடியமாட்டாராயும் வீட்டின்பத்தையும் விடமனமிலராயும் உழன்று ஒரு விரகு கண்டு "அறம் பொருளின்பங்களின் பயனே வீடு" என்று கூறிக்கொண்டு வீட்டின்பம் நுகர்வாராயுந் தம்மைத் தாமே உயர்த்திக்கொண்டு மகிழ்வாராயினர்.

எ. அகர முதல

(அ) முப்பாலின் முதற்பாலாய், ஏனைய பாலினும் முதன்மைத்தாய் மிளிரும் அறத்துப்பால், பாயிரம் இல்லறவியல் துறவறவியல் ஊழ் என்னும் நால்வகைத்தாய். முப்பத்தெட்டதிகாரங்களும் முந்நூற்றெண்பது குறட்பாக்களும் இலங்க நிற்பது. திருக்குறளின் வைப்புமுறை பற்றிக் காணுமுன், உரையாசிரியர்கள் பற்றிக் காண்போம். முப்பாலுக்கு உரைகண்ட பண்டையாசிரியன்மார் பதின்மர் என்ப. அவர் பெயரை,

"தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பருதி — திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லையுரை செய்தா ரிவர்"

எனும் பாடல் தெரிக்கும். பரிமேலழகர் ஏனைய உரையா சிரியன்மார்க்குக் காலத்தால் பிந்தியவர் என்பது வரலாற்று சிரியன்மார் துணிபு.

ஒல்காப் பெருமைத் தொல்காப்பியத்துக்கு உரைகண்டார் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், கல்லாடர், தெய்வச்சிலையார், சேனாவரையர், பேராசிரியர், மாதவச் சிவஞான யோகிகள் முத லியோர். திருமுருகாற்றுப்படை நச்சினார்க்கினியர், உரையா சிரியர், பரிமேலழகர், கலிப்பெருமாள், பரிதியார் முதலியோ ருரைகளைக் கொண்டுளது.

"இங்ஙனம் பல உரைகளுடன் திகழும் மாட்சிமை பொருந் திய நூல்களுள் திருக்குறளும் ஒன்று கொல்! "என ஏற்றங் கற்பித்து மகிழ்வாராயினர் ஒரு தமிழ்ப் புலவர் ஒரு நூலுக் குப் பல உரைகள் எழக் காரணமென்னை? அவ்வுரைகளுள் நூலாசிரியர் உள்ளத்தைத் தெளிப்பதாக எவ்வுரை கொள்ளற் பாலது? பல உரைகள் தோன்றற்காம் காரணத்தைப் பாம்பன். தவத்திரு. குமரகுருதாச அடிகளார் எடுத்தியம்பியுள்ளார். அடி களார் திருவுள்ளமாவது; 'நூலாசிரியரே உரையாசிரியரு மாதல் ஐயந்திரிபற்ற நிலையிற்றாம். ஒருவர் போன வழியொரு வர் போகாமையின். முற்றும் முரணாய், ஆங்காங்குச் சிலச்சில பலப்பல பேதப் பொருளவாய்ச் சிவஞான சித்தியார்க் கேற்பட்ட ஆறு உரைகளும், வியாசரருளிய பிரமசூத்திரத்திற்கேற்பட்ட பாடியங்களும், திருவாசகத்துக் கேற்பட்ட உரைகளும் நூலா சிரியருளத்தை நன்கு தெளிக்கமாட்டாவாயினும், கற்போரை மயல்படுத்துவதில் பெரிதும் வன்மைகொண்டு இடர் விளைப் பனவேயாம். பிறருரைகளென்னுமுண்மையை பறையறைந்து நிற்பனவேயாம். அவ்வுரைகளான் விளையும் நலத்தினும் தீங்கே பெரிதாம். சான்றாக. சிவஞான சித்தியாருரைகள் தொல்லை நூலுரைகளையும் தத்தம் புதிய யுக்திகளையும் விராய முடிபைக் கூறலான் பல மதங்களைத் தோற்றுவிப்பனவாம்! அன்றியும் புலமைப் போருக்கும் வித்தாம். இஃது சிவஞான சுவாமிகளது உரைச் செய்யுள்களால் போதரும்.

(154 ம் பக்கம் பார்க்க)

தாயினு மினியள்

வி. சூத்சாய்,
ஆய்வு மாணவி, தமிழ்த்துறை,
கேரள பல்கலைக் கழகம்.

மனிதன் அடைய வேண்டிய அனைத்து நல்லுணர்ச்சிகளுக்கும் ஏற்ற பயிற்சி அளிக்கும் கவிதை கம்பராமாயணம் அனைத்து நல்லுணர்ச்சிகளிலும் தலையாயது அன்புணர்ச்சியே. [1] எத்தகைய நற்கருமங்களாயினும், அவை அன்பின் ஒரு பகுதிக்குக் கூட ஈடாகாது என்பார் புத்தர். [2] உண்மை, நம்பிக்கை, அன்பு என்னும் மூன்றிலும் அன்பே பெரியது என்று விவிலிய நூலும் கூறும். இந்த அன்புணர்ச்சி கைவரப் பெற்றால் மற்ற உணர்ச்சிகள் எல்லாம் தாமாகவே வந்து சேர்ந்துவிடும்.

[3] அன்பின் வழியது உயிர்நிலை என்பது குறள். இந்தியர் கண்ட புதுப்பொருள் அன்பு. அருகரும், ஆழ்வாரும், ஆளுடைய பெரியாரும் கண்ட விழுப்பொருள் அன்பு, சுண்ணம்புக் காளவாய் சுடுகின்ற காலத்தும் அப்பருக்கு உயர்நிலையாய் அமைந்து இன்பூட்டியது அன்பு. [4] அடியேனை அன்பால் ஆர்த்தாய் என்னும் கூற்று இதனை வலியுறுத்தும். [5] "கல்லைக் கனிவிக்கும் கவிதை, விலங்குகளின் சீற்றத்தையும் அகற்றும், அன்பூற்றுகளை நம் மனத்தில் எழுப்பும்" என்று ஆர்ஃசு என்னும் உரோமானியர் குறிப்பிடுவது போன்று கம்பராமாயணம் இதனை மிகத் திறம்பட செய்ய வல்லது. இவ்வுணர்ச்சி எவரிடம் ஆற்றலுடையதாக இருக்கின்றதோ, அவரே இன்ப வாழ்வு வாழத் தகுந்தவர். [6] அன்பினைக் கைக்கொண்டால் துன்பம் அத்தனையும் அப்பொழுதே தீர்ந்து விடும் என்று பாரதியார் பாடுவது முற்றிலும் உண்மை

[7] பாட்டுத் திறத்தாலே இவ்வையகத்தைப் பாலிக்க வேண்டும் என்பதற்கேற்ப, சமயம் கிடைத்த பொழுதெல்லாம புலவர்கள் தலையாய கருத்துக்களைத் தங்கள் கவிதைகளில் புகுத்துதல் இயல்பு, இங்கும் சிறையிருந்த செல்விக்குத் தன் உயிரைக் காத்துக் கொள்வதற்கு ஆறுதலாக ஒரு அன்பு வடிவத்தைப் படைக்கின்றார், அவ்வடிவமே திரிசடை அல்லது முச்சடையாகும்.

இன்சொல்லும், உளத் தூய்மையும் அன்பிற்கு இரு தூண்கள் போன்றவை. இதில் இன்சொல் அன்பை வளர்ப்பதற்குக்

கரணியமாக அமைவது. எனவே தான், திரிசடையை அறி முகப்படுத்தும் பொழுதே,

இருந்தன டிரிசடை யென்னு மின்சொலில்
திருந்திழு ளொழியமற் றிருந்த தீவினை
அருந்திற லரக்கிய ரல்லு நள்ளுற
பொருந்தலுள் துயினறைக் களி பொருந்தினர்.
சுந். காண் ; காட். பட, 30.

என்று குறிப்பிடுகின்றார்.

ஒரு பாத்திரத்தை முதன் முதலில் அறிமுகம் செய்யும் பொழுது. அப்பாத்திரத்தின் இயற் பெயரையே கூறல் வேண் டும். அவ்வாறு கூருமல், அப்பாத்திரம் பெற்றுள்ள கரணியப் பெயரை முதன்முதலில் கூறுவதென்றால், அதற்குத் தக்கக் கரணியம் ஒன்றிருத்தல் வேண்டும் பொதுவாக கொடிய கருணை யற்ற செய்கைகளை உடையவர்கள் அரக்கியர்கள். இதனை,

பெண்ணெனப் பெயர்கொடு திரிபும் கூற்றினர்
சுந் காண் ; காட். பட. 60
தீயனை யவர்முக(ம்) சுந். காண் : காட். பட, 61
கொலைவாட்க ணரக்கியர்
யுத் காண் : நாகபாச. பட. 1
மாடுற வளைந்து நின்ற வளையெயிற் றரக்கி மா(ர்)
யுத். காண் : சீதைகளங். பட. 22

என்னும் சொற்றொடர்கள் தெளிவு படுத்தும். இத்தகைய அரக் கியர் பரம்பரையில் உள்ளவள் திரிசடை. எனவே, இங்குத் திரிசடை என்று பெயரைக் குறிப்பிடாது பண்பினைக் குறிப்

(152 ம் பக்கத்தின் தொடர்ச்சி)

திருக்குறள் உரையாசிரியன்மார் பதின்மரும் தமக்கு முற் பட்ட வுரையாசிரியன்மார் ஏலாவுரை வரைந்தனரெனக் கரு தியே வேறுரை கண்டனர். இவ்வாறு உரை காண்டல் பரிமே லழகரொடு முற்றுப்பெற்றது. பரிமேலழகர் உரையருளி ஏறக் குறைய எண்ணூருண்டுகள் கழிந்தன. இவ்விடைநாளில் புலமை நலஞ்சிறந்தார் பலர் தோன்றினர். புத்திலக்கியங் கண்ட புலவர் பலரிருந்தனர், உரையாசிரியன்மாரும் உதித்தனர் ஆயினுந் திருக்குறளுக்குப் பதினொன்ருவதாக உரையொன்று தோன்றிற்றில்லை. காரணமென்னை கொல்? பரிமேலழகர் உரையே திருவள்ளுவருளத்தை நன்கு தெளித்து மாட்சிமைப் பட்டதென்று அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டதே காரண மென்க.

(தொடரும்)

பிடுவது அவள் அன்பு வடிவத்தைப் பற்றிய நல்லெண்ணத்தைத் தூண்டவேயாகும். இது பின்னல் அவளுடைய நற்குண நற்செய்கைகளைப் பற்றி அறியப் போகும் நமக்கு மணியோசை போன்றே காணப்படுகின்றது.

பொதுவாகப் புலவர், ஒருவரின் அகத்தோற்றத்தை வருணிப்பதிலேயே மிகுதியாக ஈடுபடுவர். ஆனல் இங்குத் திரிசடையின் புறவருணனையாக,

இடை

பொலந்துடி மருங்குலாய்
சுந். காண் : காட். பட, 32
வணங்கு நுண்ணிடைத் திரிசடை
யுத். காண் : மீட். பட, 147

[இதிலிருந்துத் திரிசடை தனது கூந்தலை மூன்று பகுப்பாகப் பிரித்துப் பின்னித் தன் எழிலுக்கு எழிலூட்டிபிருந்தாள் என்ற கருத்து எழுகின்றது திரிசடை என்பதும் கரணியப் பெயராகவே இருத்தல் வேண்டும்.]

முகம்

திரிசடை யாளெம் மோய்
மனவி னிற்சுடர் மாமூக மாட்சியாள்
யுத். காண் : மீட். பட, 31

இவைகளே கிடைக்கின்றன. இதிலும் இறுதியிலுள்ள அநுமன் கூற்ருக வரும் பாடல் அவளது முக வருணனையாகக் காணப்பட்டாலும், அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்னும் பழமொழிக் கிணங்க அக வருணனையே மூக வருணனையாக அமைந்துள்ளது. இவற்றைத் தவிர ஏனைய வருணனைகள் அனைத்தும் இவளது சொல், செயல் முதலியவற்றை வருணிக்கும் அக வருணனையாகவே அமைந்துள்ளது [8] பாடுவோர் தம் உணர்ச்சிக்கும் கற்பனைக்கும் ஏற்றவாறு பொருள்களை புனைந்து கூறுவது இயற்கை'' என்று மேனுட்டறிஞர் அட்சன் கூறுவது போன்று புறத்தோற்றத்தை விட இவளது அகத்தோற்றம் மிகுந்த அழகுடையதாகக் கவிஞன் உளத்தில் தோன்றலே இதன் கரணியமாகும்.

இத்தகைய் இன்சொலுடைய திரிசடை சீதையிடம் தாயைக் காட்டிலும் உண்மை அன்பு உடையவள். இதனை,

........திரிசடை யென்னு மன்பினுள்
தாயினு மினியவ டன்னை நோக்கினுள்.
சுந். காண்: காட். பட, 31

என்னும் கூற்று வலியுறுத்தும்.

பொதுவாக மக்கள் ஒருவர் இன்புற்றிருக்கும் காலத்திலே அவருடன் சேர்ந்து இன்பமாக மகிழ்வர் துயருறும் காலத்தில் தொலைவில் நிற்பர். அதனல் தான், 'துன்பத்திற்கியாரே துணை யாவார்' என்றும், 'கெட்டார்க்கு நட்டாரே இல்' என்னும் வாய்மொழிகளும் எழுந்துள்ளன. இத்துன்பத்திலும் துணை யாக நிற்பவர் ஒருயிரெனத் திகழும் மனைவியோ, அன்றித் தன்னலமற்ற அன்பு பாராட்டும் தாயோ ஆகும் ஆனல் இங்கு இத்தகைய உறவுகளின்றியும் திரிசடை தன்னலமற்ற அன்பு பாராட்டுகின்ருள். எனவேதான், 'தாயினும் இனியவள்' என்று போற்றப்படுகின்ருள். இன்னும்

அன்னையே சுந். காண்; காட். பட, 53
அன்னை யுத். காண: சீதைகளங், பட, 30

என்னும் சீதையின் விளிகளும் குறிப்பிடத்தக்கன.

கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல் குறள் — 796.

என்னும் பொய்யாமொழிக்குச் சான்று பகருகின்ருள்.

மேலும் இராவணனுக்கஞ்சி மறைமுகமாகத் தேற்றி வந்த திரிசடை, உருக்காட்டுப் படலத்தில் [9] கொன்மின், கொன்மின் கொன்று குறைத்துக் குடராரத் தின்மின் தன்மின் என்ற அரக்கியர் கூக்குரலால் கலங்கிய சீதையைத் தேற்றும்பொழுது, இராவணனல் தன் உயிருக்குக் கேடு வருமோ என்று கூட எண்ணுமல் கனவின் செய்தியும் அவர்கள் அறியும் படியாகவே அமைந்து விடுகிறது. இதிலிருந்து, சீதை கலங்குவதையும், துயருறுவதையும், அரக்கியரால் மருட்டப்படுவதையும் காணப் பெருத தூய அன்பு படைத்தவள் திரிசடை என்பது புலனுகும். கவிமணி கூறுவது போன்று, [10] அன்பினுக்காகவே வாழ்ந்து, அன்பில் ஆவியும் போக்கத் துணிந்து விடுகிருள்.

திரிசடை சீதையைத் தேற்றுவதையே பெரிதுங் கண்ணுங் கருத்துமாகக் கொண்டவள். பலவாறு உண்மைப் பொருள் களைக் கூறித் தேற்றுவதில் நற்கனவினல் தேற்றுவதும் குறிப் பிடத்தக்கது. திரிசடையை முதன் முதலில் காவியத்தில் கொண்டுவரும் கம்பன், காட்சிப் படலத்தில் தான் கண்ட கன

வினையே எடுத்துக் கூறிச் சீதையை ஆற்றுவதாக அமைத்துள்ளான். இக்கனவொன்றே, பின்னர் வரும் மாயாசகனப் படலத்தும், சீதை களங்காண் படலத்தும் சீதையைத் தேற்ற சாதகமாய் அமைத்துள்ளது. பொதுவாகத் தமிழ் இலக்கியங்களிலும் பிற ஆங்கில இலக்கியங்களிலும் பின்னர் வருவனவற்றை முன்னர்ச் சுட்டலுக்குக் கனவு பயன்படுதல் உண்டு. ஆனால் பொதுவாக இவை யாவும் தலைவியர் காண்டலாகவே அமைந்துள்ளன. ஆனால் இங்குத் திரிசடை என்னும் கன்னிப் பெண் வாயிலாக விளக்குகின்றார். இது இப்பாத்திரத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுதற்கேயாகும். இவ்வாறு கம்பன், கனவிலும் புதுமையைப் புகுத்திப் பாத்திரங்களைப் படைத்துள்ளான்.

ஓர் நள்ளிரவில் அரக்கியர் யாவரும் துயின்று விடவே, இதனைத் தக்க தருணமாகக் கொண்ட சீதை, தனது இடது கண்ணும் தோளும் துடித்தலை நல்நிமித்தமாகக் கொண்டு திரிசடையிடம் கூறி ஆறுதல் பெற விழைகின்றாள். இதனை யறிந்த திரிசடை மகிழ்ந்து, இவையாவும் நல்நிமித்தம் என்றும், பொன் வண்டொன்று வந்து சீதையின் காதில் இன்னிசை பாடிச் சென்றதை, இராமன் தூதுவன் ஒருவன் நற்செய்தி கூறும்படியாக வரப்பெறுவன் என்றும் கூறி தான் கண்ட கனவினையும் விரித்துரைக்கின்றாள்.

எண்ணெய் மெழுகிய பத்துத் தலைகளுடன். இராவணன் கழுதையும் பேயும் பூட்டிய தேரின்மீது ஏறித் தன் சுற்றத்தாரோடும் தென் திசை நோக்கி இவர்ந்து சென்றதாகவும், மலையில் இரண்டு ஆண் சிங்கங்கள் தமக்கு உதவியாக அமைந்த புலிக் கூட்டத்தோடு மதம் பொருந்திய யானைக் கூட்டத்தை அழித்தது என்றும், அவ்வனத்தில் இருந்த ஒப்பில்லாத மயிலானது ஒப்பில்லாத நகரை அடைதற்குச் சென்றது என்றும். செந்நிறமுடையவளொருத்தி, ஆயிரம் அழகிய விளக்குகளினொளி பொருந்தும்படி கொளுத்திய பெரு விளக்கைக் கையிலேந்தி இராவணன் மாளிகையினின்றும் போந்து வீடணன் கோயிலைச் சார்ந்ததாகவும் குறிப்பிட்டு இராவணன் அழிவையும், இராமன் வெற்றியையும், சீதையின் சிறை மீட்டலையும், வீடணனுக்குக் கிடைக்கப் போகின்ற அரசாட்சியையும் உறுதிப்படுத்துகின்றாள். மேலும் ஓம குண்டத்தில் நெருப்பு அவிதல், பெண் யானை மதநீர் பொழிதல் முதலிய உற்பாதங்களாலும் இராவணன் அழிதல் உறுதி என்று தெரிவிக்கின்றாள். அரக்கியரின்

கொடுமைத் தீயினுக்காற்ருது வாடிய கற்பின் கொடிக்கு இக் கனவு அருமருந்தாய் அமைந்துள்ளது.

இனி, சீதை களங்காண் படலத்தும் அவளது உயிரைத் தேற்றுதற்குச் சாதகமாய் அமைந்துள்ளது இக்கனவே. இராமன் இறந்துவிட்டான் என்னும் எண்ணத்தால் பலவாறரற்றி, இனி அவன்மீது விழுந்து இறத்தலே நன்று என்று எண்ணி எழுவாளைத் திரிசடை விலக்கி, கனவின் வழியாலும், பல்வேறு கரணியங்களாலும் செயல்களாலும். காட்சியளவையாலும் இராமன் முதலியோர் மாண்டிலர் என்றுரைத்துச் சீதையின் உயிரைக் காக்கின்ருள்.

இவ்வாறு [11] உடுக்கை இழந்தவன் கைபோன்று இடுக்கண் களைந்து தக்க சமயத்தில் உயிர் தந்த திரிசடை சீதையின் கண்ணுக்குத் தெய்வமாகத் தோன்றுகின்ருள்.

அன்னைநீ யுரைத்த தொன்று மழிந்தில தாதலானே
உன்னையே தெய்வ மாக்கொண் டித்தனை கால முய்ந்தேன்
இன்னமிவ் விரவு முற்று மிருக்கின்றே னிறத்த லென்பால்
முன்னமே முடிந்த தன்றே யென்றனள் முளரி நீத்தாள்.
யுத். காண்: சீதைகளங். பட. 30

மரையில் உறையும் திருமகள் அவதாரம் சீதை. திரிசடையோ கொடிய செயல் வாய்ந்த அரக்கியர் பரம்பரையில் உதித்தவள். இத்தகைய திரிசடையைத் தெய்வமாகிய சீதையே 'தெய்வம்' என்று அழைக்கின்ருள் என்பதினைப் புலப்படுத்தவே 'முளரி நீத்தாள்' என்று கம்பன் இப்பாடலின் இறுதியில் சீதையைக் குறிப்பிடுகின்ருன். இவ்வாறு தெய்வத்திற்கும் தெய்வமாக உயர்ந்து விடுதலின் கரணியம், இவள் அன்பும் நற்செய்கையுமே ஆகும். [12] அன்பே சிவம் என்று திருமூலரும், [13] அன்புரு வாம்பர சிவமே என்று வள்ளலாரும் மொழிவார். எக்குலத்திற் பிறந்தவராயினும், நற்குண நற்செய்கைகளால் மனிதன் தெய்வமாகலாம் என்னும் கருத்தையே கம்பன் இங்குத் தெளிவுபடக் காட்டியுள்ளான் மேலும் [14] எக்குலத் தியாவர்க்கும் வினையினுல் வருமேன்மையுங் கீழ்மையும் என்றும், முதலை பற்ற ஆதிமூலமே என்று அழைத்திட [15] வீடுபெற்ற விலங்கும் விலங்கதோ என்றும், [16] மனு வின்னெறி புக்கவேலவ் விலங்கும் புத்தேளிரே என்றும் இராமன் வாலியிடம் கூறும் கூற்றுக்களும்; சீவக சிந்தாமணியில் நாய் அமரனுகும் தன்மையும் இக்கருத்தையே வலியுறுத்தும்.

இத்தகைய சிக்கலான சூழ்நிலையில் சீதையைத் திரிசடை தவிர வேறு யாவராலும் மனந்தேறுமாறு செய்திருத்தல் இய லாது. மாயச்செயலை அறியாத சீதையும், இராமன் இறந்து விட்டான் என்னும் எண்ணத்தால் புட்பக விமானத்தினின் றும் குதித்து இறந்திருப்பாள். சீதையின் உயிர் பிரியின் இரா மன் இராவணனை வெல்லுதலும் இல்லை. எனவே இராமனின் பரக்கும் பல்புகழமுதினைப் பருகக் கரணியமாகயிருந்தது சீதை யின் உயிர். இச்சீதையின் உயிரைக் காக்கக் கரணியமாயி ருந்தது திரிசடையின் உயிர். இவ்வாறு உயிருக்குயிராய் அமைந்த திரிசடை அவளுக்குத் துணையாக அமைந்து தேறு தல் மொழிகள் பல கூறி அவளைத் தேற்றவில்லையெனில், இராமன் புகழ் கூறும் இராமாயணமே இல்லை எனலாம். எனவே, இத்தகைய இன்றியமையாமை நோக்கி திரிசடையை இராமாயணத்தின் உயிர் என்றாலும் மிகையாகாது. [17] தேடிய நவமே யன்ன திரிசடை என்னும் கவிக்கூற்றும் இவளது தெய்வ நிலையையே சுட்டுகிறது. இனி மீட்சிப்படலத்தும்.

> ....யிலங்கைக்
> கணங்கு தானென விருத்தி
> யுத். காண் : மீட். பட, 147

என்று திரிசடையினிடம் சீதை கூறி, பிரியாவிடை பெறுகின் றாள். திரிசடையும் தன் கண்களில் நீர்மல்க விடைபெறுகின் றாள். இவ்வாறு கண்ணீர் சிந்தலும் உண்மை அன்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

> அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
> புன்கணீர் பூசல் தரும். குறள் — 71

என்னும் குறளும், [18] உண்மையான அன்பைக் கண்ணீரி லிருந்து அறிந்து விடலாம் என்னும் வித்யபதியின் கருத்தும் இங்கு குறிப்பிடத்தக்கது

கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்பது பெரியோர் அனு பவ வாயிலாகக் கண்ட உண்மை. பண்பாட்டினால் மேம்பட்ட ஒருவரை, அதே பண்பாடு நிறைந்துள்ள ஒருவரே அறிந்து அன்பு செலுத்துதல் இயலும். இவ்வடிப்படையிலே அறத்திலே பிறந்து, அறத்திலே வளர்ந்து, அறத்தையே சார்பாகக் கொண்ட மகளிர் இருவரும் அறச்சூழ் நிலையில் ஒன்றி நட்புக் கொண்டனர். தன் இனத்தவர் என்றும், உறவினர் என்றும்

பாராமல் அறத்தையே பெரிதாக எண்ணி மதித்ததினால், [19] 'தீயவர்' என்றும், [20] 'புல்லர்' என்றும் தன் இனத்தவரையே குறிப்பிடுகின்றாள். இவ்வாறு, கும்பகருணனைப் போலல்லாது இவளும், இவள் தந்தை வீடணனும் தங்கள் உற்றார் உறவினர்களுக்கு எதிராகவே அமைந்துள்ளார்கள். இதனைச் சிலர் குற்றமாகக் கொள்ளினும், இதுவே அவர்கள் தங்கள் அறக் கருத்தில் கொண்டுள்ள ஈடிணையற்ற பற்றினை எடுத்துக் காட்ட போதிய சான்றாக அமைந்துள்ளதினை நோக்க, குற்றமே குணமாக மாறிவிடுகின்றது [21] புகழெனின் உயிரும் கொடுக்குவர், பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர் என்னும் பழந் தமிழரின் பண்பாட்டிற்குச் சான்றாகத் திகழ்கின்றாள் திரிசடை.

இயல்பாக நல்லுணர்ச்சி பெற்றவர்களாயினும், துன்பத்தால் கலங்கி, அறிவின் ஆற்றல் பெறாதபோது. வாழ்வின் மேடு பள்ளங்களில் தடுமாறுவர். அன்னாருக்கு நன்னெறியிற் சிறந்த சான்றோரின் துணை மிகவும் இன்றியமையாதது அதற்காகவே, அரக்கரின் மாயத்தால் சீதை இறந்து விட்டாள் என்று எண்ணி அல்லலுறும் இராமனைத் தேற்ற வீடணனையும். சீதையைத் தேற்ற திரிசடையையும் படைத்துள்ளார்

கம்பராமாயணம் முழுவதிலும் இருபத்தேழு பாடல்களே இவளது கூற்றாக அமைந்துள்ளதெனினும், ஓவ்வோர் பாடலும் இவளது அறிவுச் சுடர்க்குச் சான்று பகர்வதாகவே அமைந்துள்ளது.

[22] உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும் என்பதற்கேற்ப திரிசடையின் உள்ளத் தூய்மையே இவற்றிற்கெல்லாம் அடிப்படைக் கரணியமாகும். இதனைச் சீதையின் கூற்றாக விளக்குகின்றான் கம்பன்.

தூயைநீ கேட்டியென் றுணைவி யாமென
சுந் காண்; காட். பட, 31

மேலும்,

நயந்த சிந்தையாள்
சுந். காண்: காட். பட, 36

வெயிலினு மெய்யன வுரைத்தன் மேயினள்
சுந். காண்: காட். பட, 39

கறுத்தலில் சிந்தையாள்
சுந். காண்: பிணி பட, 30

என்பதாக வரும் கவிக் கூற்றுக்களும் இதனை வலியுறுத்தும்.

கவிகள், தம் காப்பியத்தை நடத்திச் செல்லுகையில் கதைக் குரியவர்களின் ஒழுகலாறு வாயிலாகவோ, அன்னார் ஒருவருக் கொருவர் அறிவுறுத்தல் வாயிலாகவோ, உலக மக்கள் அறிந்து பயனடையக் கூடிய பல உண்மைகளை வெளிப்படுத்தல இயல்பு. அவ்வுண்மைகளே காப்பியத்தின் பண்பாகும். இதுபோன்றே திரிசடையின் வாயிலாக நட்பினர் ஒருவருக்கொருவர் எத்தகைய அன்பும் அருளும் உடையவராயிருக்க வேண்டுமென்பதும், எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதும் வியப்பும் மகிழ்ச்சியும் அடையும் வண்ணம் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. சுருங்கக் கூறின், அன்பு, கருணை, அறம் என்னும் முப் பண்பு களின் வடிவமே முச்சடை எனல் மிகையாது.

அடிக்குறிப்புகள்.

1. பக்கம் — 34. புத்தர் போதனைகள் — ப ராமசுவாமி
2. ......faith, hope, charity, these three; but the greatest of these is charity. — Chapter, 13:13, I Corinthians, Holy Bible.
3. குறள் — 80
4. பக்கம் — 48. தேவார ஒளிநெறி. (அப்பர்)
வ. சு. செங்கல்வராய பிள்ளை
5. பக்கம் — 42, கவிதைக்கலை — ரா. ஸ்ரீ தேசிகன்
6. அன்பினைக் கைக்கொள் என்பான்; — துன்பம் அத்தனை யும் அப்பொழுது தீர்ந்திடும் என்பான்.
கண்ணன் — என் தந்தை, 10, கண்ணன் பாட்டு, பாரதி யார் கவிதைகள் — பாரதியார்.
7. பாட்டுத் திறத்தாலே — இவ்வையகத்தைப் பாலித் திடவேணும்.
காணி நிலம் வேண்டும், 3. தோத்திர பாடல்கள், பாரதி யார் கவிதைகள் — பாரதியார்.
8. The touch of imagination and feeling upon the outer world may often transfigure, but should never misrepresent or distort it. — P — 81, An introduction to the study of Literature — William Henry Hudson.

9. சுந்தர காண்டம், நிந்தனைப் படலம், 76 —
வை. மு, கோபால கிருட்டின மாசாரியர்.

10. அன்பினுக் காகவே வாழ்பவர்ஆர் — அன்பில்
ஆவியும் போக்கத் துணிபவர் ஆர்?
பெண்களின் உரிமைகள், 11, மலரும் மாலையும் —
சி. தேசிக விநாயகம் பிள்ளை.

11. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண்களைவதாம் நட்பு. — குறள் 788.

12. அன்புடைமை. 1, திருமந்திரம் — திருமூலர்.

13. பக்கம் — 47, பரசிவ வணக்கம், திருவருட்பா (ஆருவது திருமுறை) — இராமலிங்க சுவாமிகள்

14. கிட்கிந்தா காண்டம். வாலிவதைப் படலம். 115 —
வை. மு. கோபாலகிருட்டின மாசாரியர்.

15. கிட்கிந்தா காண்டம். வாலிவதைப் படலம். 109 —
வை. மு. கோபாலகிருட்டின மாசாரியர்.

16. கிட்கிந்தா காண்டம், வாலிவதைப் படலம், 112 —
வை. மு. கோபாலகிருட்டின மாசாரியர்.

17. யுத்த காண்டம், சீதை களங்காண்படலம், 22 —
வை. மு. கோபால கிருட்டின மாசாரியர்.

(163-ஆம் பக்கம் பார்க்க)

கையறவு

திரு. A. S கைலைநாத பிள்ளை அவர்கள் 22—7—71 அன்று இயற்கை யெய்தினார்கள். அவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கம் நடத்திவரும் திக்கற்ற மாணவர் இல்லத்தின் மதிப்பியல் காப்பாளாராக சில ஆண்டுகளும், இராதாகிருட்டின இளநிலை ஆதாரப்பள்ளியின் நண்பகலுணவுக் கழகத்தின் பொருளாளராக பல ஆண்டுகளும், நிறைவேற்றுக் கழக உறுப்பினராக ஓராண்டும் தொண்டாற்றினார்கள் நம் சங்கத்தில் திருப்பாவை திருவெம்பாவை மாநாடு சில ஆண்டுகட்கு முன்னர் நடைபெற்றபோது அதில் பெரும்பங்கேற்றார்கள். இராதாகிருட்டின இளநிலைப் பள்ளிக்கு திரு. A. K. வேலன் அவர்களின் பொருளுதவி கொண்டு கட்டடம் கட்டியபோது கட்டட வேலைகளை அயராது கண்காணித்து வந்தார்கள். அவரது இன்னுயிர் இறைவனடியில் பேரின்பம் எய்துமாக.

(162-ஆம் பக்கத் தொடர்ச்சி)

18. Fragrance reveals the flower and its pollen
And the eyes and the tears
The dawn of love
P-27, Love songs of Vidyapati. — Translated by Deben Bhattacharya.

19, சுந்தர காண்டம், காட்சிப் படலம், 39. — வை. மு. கோபால கிருட்டின மாசாரியர்.

20. யுத்த காண்டம், சீதை களங்காண் படலம், 24. — வை. மு. கோபால கிருட்டின மாசாரியர்.

21. புறநானூறு — 182, கடலுள் மாய்ந்த இளம் பெரு வழுதி.

22. தமிழ் — 4, பாரதியார் பாடல்கள். — பாரதியார்.

குழந்தைகள் இல்லம்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் கண்காணிப்பின் கீழ் "குழந்தைகள் இல்லம்" என்ற கல்வி நிலையம் திருவள்ளுவர் ஆண்டு 2002 ஆடிந்திங்கள் 11 ஆம் நாளன்று (27—7—71இல்) தொடங்கப்பெற்றது. இவ்வில்லம் 3 முதல் 5 அகவையுள்ள இளஞ்சிறுர்களுக்கென அமைக்கப்பெற்றுள்ளது. குழந்தைகள் தாங்களாகவே விளையாடியும் பொருள்களைக் கையாண்டும் ஐம்புல உணர்வுகளையும் பகுத்தறிவையும் வளர்த்துக்கொள்ள ஏற்ற வசதிகள் செய்யப் பெற்றுள்ளது. இவ்வசதிகளை விரிவாகச் செய்து டாக்டர் மாண்டிசோரி அம்மையார் வகுத்த முறையில் இவ்வில்லம் மேலும் வளர ஆவனசெய்து வருகிறோம்.

தஞ்சை நகர மன்றத் தலைவர் திரு. S. பெத்தண்ணன் அவர்கள் இல்லத்தைத் திறந்து வைத்து ஆசி கூறினார்கள். சங்க அன்பர்கள், நகரமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் முதலானோர் விழாவிற்கு வந்து சிறப்பித்தனர். இராதாகிருட்டின இளநிலைத் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் அவர்கள் நன்றிகூற விழா இனிது முடிந்தது.

தமிழ் மொழி வளர்ச்சியில் ஒரு கூறு.

பொதுமக்கள் பயன்படுத்தும் பிறமொழிச் சொற்கள் சிலவற்றிற்கு ஏற்ற தூய தமிழ்ச் சொற்கள் இப்போது வெளியிடப்படுகின்றன. வழக்கம்போல அறிஞர்கள் தக்க திருத்தங்களை எழுதியனுப்ப வேண்டுகிறோம்

கடிதம்	—	மடல், முடங்கல்
கஷ்டம்	—	துன்பம், ஊறு, அரிது
சத்தம்	—	கூச்சல், ஒலி, அரவம், ஓசை
சாமான்	—	பண்டம்
சாதம்	—	சோறு
சாப்பாடு	—	உண்டி, உணவு
சௌக்யம்	—	நலம் (நலமா, நலந்தானு)
சுலபம்	—	எளிது, எளிமை
சுரம்	—	காய்ச்சல்
தயார்	—	அணியம், ஆயத்தம்
தகராறு	—	இகல், மாறுபாடு
தொந்திரவு	—	சிறு துன்பம், சிற்றூறு
மார்க்கெட்	—	அங்காடி
திருப்தி	—	நிறைவு, மனநிறைவு
அதிருப்தி	—	குறைவு, மனக்குறைவு
காலண்டர்	—	நாட் காட்டி
தேதி	—	நாள்
கடிகாரம்	—	கடிகைஆரம் என்பது கடிகாரம் ஆயிற்று காலவட்டிகை, மணிப்பொறி,
விதம்	—	வகை
பதில்	—	விடை
அவசரம், Urgent, சல்தி	—	விரைவு
அவசியம்	—	இன்றியமையாமை
ஆபத்து	—	ஏதம்
வயது	—	அகவை
வித்தியாசம்	—	வேறுபாடு